தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 8, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 மார்ச் 22, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்"

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும் போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. க. பழநிவேலன் அவர்கள் 23-5-2006 அன்றும், திருமதி செ. சுந்தராம்பாள் அவர்கள் 14–2–2007 அன்றும், திரு. வீ. மலைக்கண்ணன் அவர்கள் 26–2–2007 அன்றும், திரு. எ. சுவாமிதாஸ் அவர்கள் 12–3–2007 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. க. பழநிவேலன் அவர்கள் வரகூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திருமதி செ. சுந்தராம்பாள் அவர்கள் மேட்டூர் தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை மற்றும் 2001 முதல் 2006 வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் அவர்கள் இளையான்குடி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ் அவர்கள் 1962 முதல் 1967 வரை குளச்சல் தொகுதியிலிருந்தும், 1971 முதல் 1976 வரை மற்றும் 1977 முதல் 1980 வரை இரண்டு முறை பத்மநாபபுரம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை மாவட்டத்தில், மதுரை மேற்கு தொகுதியிலிருந்து 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டு வரை சிறப்புற பணியாற்றியவரும், 2006 ஆம் ஆண்டில் அதே தொகுதியிலிருந்து இரண்டாம் முறையாக இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போதைய சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவையும், அன்பையும் பெற்றவரும், அரசின் திட்டங்களைத் தனது தொகுதி மக்களுக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, சீரிய முறையில் பணியாற்றியவருமான திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் 5–2–2007 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும்